மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் இருக்கக்கூடிய இடமானது நகரத்திலே மிகவும் முக்கியமான பகுதியிலே இருக்கக்கூடியது. அதை வெளியேற்று வதால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தனித் தனி இடங்களில் பேருந்து நிலையங்களை வைப்பது வேறு ஒரு காரியம். அப்படி அப்படியே மாற்றங்களைச் செய்யலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்வ தற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் கருத்துக்கள் தெரிவிக் கின்றார்கள். அதற்குப் பின்னால் சில கருத்துக்களை மாநகராட்சி தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப் படுகின்ற அளவுக்கு நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்ளாது விரைவிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இதிலே இருக்கிற சங்கடச் சூழ்நிலையினால்தான் வேலை தடைபடுகிறதே தவிர அரசாங்கத்தினுடைய கவனக் குறைவினால் இல்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: தலைவர் அவர்களே, வடசென்னையில் தங்கசாலையில் பேருந்து நிலையத்திற்காக கார்ப்பரேஷன் முயற்சி செய்கிறது. இப்பொழுது அங்கேயுள்ள பேருந்து நிலையத்தில் போதிய இடம் இல்லாததால் பேருந்துகள் எல்லாம் வெளியிலே நிற்கின்றன. அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கேள்வி எஸ்பிளனேட் பேருந்து நிலையத்தைப் பற்றியது. தங்கசாலை எந்த அளவிலே இருக்கிறது என்பதை பற்றிய விவரம் தற்பொழுது என்னிடத் திலே இல்லை.

Sethusamudram Project

• 223 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any specific request has been made by the Government for inclusion of the Sethusamudram Project in the Fourth Plan; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:

(அ) ஆம்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த சேதுசமுத்திரத் திட்டம் நம்முடைய நாட்டிற்கு அதிலும் குறிப் பாக நம்முடைய தமிழ் நாட்டிற்கு பாதுகாப்பு போன்ற நன்மை களை அளிக்கவல்லதால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

1970 மார்ச் 5]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்தக் கால்வாயைத் தோண்டுவதற்கும், வெட்டுவதற்கும், வேண்டிய அளவுக்கு வெகு தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. ஆனால், இது மத்திய அரசினால் செய்யப்படவேண்டிய காரியமாக இருக்கிறது. இதைப்பற்றிப் பல முறைகள் மத்திய அரசுக்கு எழுதியும், முதலமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்துச் சொல்லியும் இருக்கிறார்கள். மத்திய அரசு கூட இது நல்ல திட்டம், வருவாய் உள்ள திட்டம் என்று எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இருப்பினும், அது இன்னும் ஆய்வில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த சேது சமுத்திரத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்படவேண்டுமென்று நாம் கேட்பது ஏதோ இந்திய அரசை பிச்சை கேட்பதல்ல. நம்முடைய உரிமையை வற்புறுத்திப் பெற வேண்டிய காரணத்தினாலே தமிழ் நாட்டு அரசு வற்புறுத்திச் சொல்ல எடுத்த முயற்சிகள் யாவை? இந்த சேது சமுத்திரத் திட்டத்தினால் என்ன என்ன நன்மைகள் விளையும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இது பிச்சை கேட்பதாக ஆகாது என்பதை மிகத் தெளிவாகப் புள்ளி விவரங்களிலிருந்து சொல்ல முடியும். இந்தக் கால்வாயை வெட்டுவதற்கு 37½ கோடி ரூபாய் செலவாகிறது. இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம், வருவாய் இரண்டு கோடியே 37 லட்சம் கிடைக்கும். முதல் வருடத்திலேயே நிகர லாபம் 70 லட்சம் ரூபாய், அதாவது 4% கிடைக்கும். சில ஆண்டுகள் சென்றபின் 14 சதவிகிதம் கொடுக்கும். ஆகவே, இது பிச்சையல்ல, வருவாய் தரக்கூடிய விதத்திலே இருக்கிறது.

இதனால் என்ன என்ன நன்மைகள் ஏற்படும் என்று கேட்டார்கள். நன்மைகள் என்ன என்ன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். இந்தியாவின் மேற்குக் கடற்கரையையும் கிழக்கு கடற்கரையையும் இணைப்பது இந்தக் கால்வாய் ஆகும். மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் இப்பொழுது இலங்கையைச் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. அதாவது 360 மைல் அளவுக்குச் சுற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. தூத்துக்குடியிலிருந்து ஒரு கப்பல் சென்னைக்கு வர வேண்டுமென்றால் 360 மைல் சுற்றிவர வேண்டியிருக்கிறது. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால் அப்படிப்பட்ட அவசியமில்லை. 13-5-1969 அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேர்முகமாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 26-9-1969 அன்று அதை மீண்டும் வற்புறுத்தி கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் நவம்பர் 1969-இல் தமிழக அரசின் அதிகாரிகள் இது சம்பந்தப்பட்ட மத்திய

அரசு அதிகாரிகளுடன் கூடிப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடத்தில் நேரடியாகவும் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கால்வாய்த் திட்டம் மிகவும் நல்ல திட்டம், வருவாய் உள்ள திட்டம் என்று மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இது பற்றி நல்ல முறையிலே கருத்துத் தெரிவித்து இருந்தாலும், இன்னமும் அது ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் இரண்டையும் ஒருங்கிணைத்து, ஒருங்கு அமைந்த கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டுமென்று கருதி 5 கோடி ரூபாய் தூத்துக்குடி திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த சேது சமுதிரத் திட்டத்திற்கு எப்பொழுது ஒதுக்குவார்கள் என்று தெரியவில்லை. எழுச்சி நாள் பற்றிக் கேட்டார்கள். அது எனக்கு அப்பாற்பட்டது. அதற்கு அமைச்சரவைதான் முடிவு எடுக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் அதற்கு விடை சொல்வார்களானால் நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தூத்துக்குடி திட்டத்தையும், சேலம் இரும்பாலைத் திட்டத்தையும் மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற அளவுக்கு எழுச்சி நாள் கொண்டாடினார்கள். அதேபோல் சேதுக் கால்வாய்த் திட்டத்திலும், சேலம் இரும்பாலைத் திட்டத்திலும் தமிழக மக்கள் எத்தகைய மன எழுச்சி கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பிரதிபலித்துக் காட்டும் வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் எழுச்சி நாளைக் கொண்டாட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காலம் வரும்; காத்திருப்போம்.

திரு. டி. தங்கப்பன்: பொருளாதார ரீதியில் தன்னைக் கட்டி வரக்கூடியதும், தொழிற் துறையிலே சாத்தியமானதுமான இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதற்கு இலங்கை அரசு தனக்குப் பாதகம் ஏற்படும் என்ற காரணத்தால் மத்திய அரசாங்கத்தில் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் தடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நமது நிலத்திலேதான் கால்வாயை வெட்டுகிறோம். இந்திய மண்ணிலேயேதான் ஆறு மைல் தூரத்திற்குக் கால்வாய் வெட்டுகிறோம். இதிலே இலங்கை அரசு தலையிடுவதற்கு எந்தவித வழியும் இல்லை. அவர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று கூறியதாகவும் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the importance of the question which affects our State, why don't you be a little liberal in allowing me to put one more supplementary question?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 224, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.